நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

பட்டியல் வழக்கு எண். **61/ 2020**
வழக்கு சாட்சி- **அ.சா. 7**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | மகாலிங்கம் | : | ஜாதி | |
| தந்தை பெயர் | நடராஜன் | : | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர், செங்கிப்பட்டி காவல் நிலையம். |
| கிராமம் | | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 59/2023 |

( எதிரி ஆஜர். )

**<u>நாள்</u>: <u>19.04.2023</u>**

**முதல் விசாரணை**: நான் தற்சமயம் செங்கிப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். கடந்த 30.08.2018 அன்று இரவு 00.10 மணிக்கு நடுக்காவேரி காவல் நிலையத்தில் நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, புஷ்பா ஜான்சிமேரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 160/2018 சட்டப்பிரிவு 304(A) of *IPC* ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4/அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு வழக்கின் கோப்புகளை விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** - 29.08.2018 அன்று இரவு 08.00 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு மறுதினம் 30.08.2018 இரவு 12.10 மணிக்குமேல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அவருடைய முதல் விசாரணையில் விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1 கொடுத்த புகாரை சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

ஒம்/-து.ஹரிராம்,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.